# கற்றல் ஊக்கி - 04

பாடம் :- **சுற்றாடல்சார் செயற்பாடுகள்**

தரம் :- **04**

அலகு :- **5.0 நாம் இலங்கையர்**
**6.0 பாதுகாப்பும் கரிசனையும்**

Aaruthal Sri Lanka

**2018 - தவணை - 02**

அறிவுறுத்தல்கள்

- வினாக்களைப் பகுதியாகவோ முழுமையாகவோ கற்பித்தலின்போதோ அல்லது அலகு முடிவிலோ வசதிக்கேற்ப பயன்படுத்தலாம்.
- தேர்ச்சி அடிப்படையிலான விளக்கமளிப்பதற்கும் கணிப்பீட்டிற்கும் இது பயன்படுத்தப்படலாம்.

| பெயர் | |
|---|---|

| பரீட்சையாளரின் பாவனைக்கு | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா எண் | 1 | 2 | 3 | 4 | மொத்தப் புள்ளி |
| ஒதுக்கப்பட்ட புள்ளி | 25 | 25 | 25 | 25 | 100 |
| பெற்ற புள்ளி | | | | | |

**(01)** **எமது நாடு இலங்கையாகும். இது சிறிய தீவாக இருந்த போதிலும், எல்லா இயற்கை அமைப்புக்களையும் கொண்டது. அழகிய கடற்கரைகள், நீர்வீழ்ச்சிகள், மலைக்குன்றுகள், மனதைக் கவரும் பூங்காக்கள், சரணாலயங்கள், மழைக்காடுகள் ஆகியவற்றைக் கொண்டது. இலங்கை தொடர்பாக பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

(1) இலங்கையில் உள்ள பிரசித்தி பெற்ற இரண்டு தாவரவியல் பூங்காக்களும் எவை?

..............................................................................................................................

(2) இலங்கையில் உள்ள நீர்வீழ்ச்சிகளில் மிகவும் உயரமானது எது?

..............................................................................................................................

(3) (அ) நான்கு சமயத்தவராவும் வணங்கப்படும் வணக்க ஸ்தலத்தைக் கொண்ட மலைக்குன்று எது?

..............................................................................................................................

(ஆ) அதனை வெவ்வேறு சமயத்தவர்கள் அழைக்கும் பெயர்கள் எவை?

..............................................................................................................................

(4) சிங்கராஜவனம், படகமுவ என்பன சிறந்த மழைக்காடுகள் ஆகும். இவை எந்த மாவட்டங்களில் அமைந்துள்ளன?

..............................................................................................................................

(5) 1990 ஆண்டு மகாவலிகங்கையை வடக்கு நோக்கி திசை திருப்பும் திட்டம் ஆரம்பமானது. இத்திட்டத்தில் பல நீர்த்தேக்கங்களும், நீர்மின்நிலையங்களும் உருவாக்கப்பட்டன. இறுதியாக அமைக்கப்பட்ட நீர்த்தேக்கம் மொறக கந்த வாவி ஆகும். இது இவ்வருடம் ஜனவரி மாதம் திறந்து வைக்கப்பட்டது.

(அ) மகாவலிகங்கை நீர்ப்பாசனத் திட்டத்தில் அமைக்கப்பட்ட அணைக்கட்டுக்கள் 4 இன் பெயர்களை எழுதுக.

..............................................................................................................................


(ஆ) மகாவலிகங்கை எந்த மாவட்டத்தில் கடலுடன் கலக்கின்றது?

..............................................................................................................................


Copyright © Aaruthal 2018

kalvi.lk

(6) தரப்பட்ட இலங்கைப் படத்தில் அல்லது வேறு பெரிய இலங்கைப் படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்துக்காட்டுக.




(அ) மனதைக்கவரும் கடற்கரைகள் - பாசிக்குடா, பெந்தோட்டை

(ஆ) விலங்கு சரணாலயங்கள் - வில்பத்து, குமனா, யால

**(02)** (1) இலங்கையில் வாழும் பிரதான மக்கள் பிரிவினரின் தேசிய உடைகளின் படங்கள் தரப்பட்டுள்ளன. படங்களின் கீழ் அவ்வினத்தவரின் பெயரை எழுதுக.






.................................... ....................................





.................................... ....................................

(2) இலங்கையில் வாழும் குறித்த இனத்தவர் ஒருவரின் படம் தரப்பட்டுள்ளது. இவர் எந்த இனத்தவர்? இவர்கள் ஆடும் நடனம் எவ்வாறு அழைக்கப்படும்?



..............................................................................

(3) பௌத்தர்கள், இந்துக்களின் ஆலயங்களுடன் தொடர்புள்ளதாக ஒரு மரம் விளங்குகிறது. அம்மரத்தின் பெயர் யாது?

..............................................................................



kalvi.lk

(4) இலங்கையில் வாழும் பிரதான மக்கள் பிரிவினரின் பண்புகள் தொடர்பான பின்வரும் அட்டவணையைப் பொருத்தமாக பூர்த்தி செய்க.

| | மக்கட் பிரிவினர் | உணவு, பானங்கள் | பண்டிகைகள் | பிரதான சமயம் | சமயநூல் |
|---|---|---|---|---|---|
| (1) | சிங்களவர் | | | | |
| (2) | | மோதகம், வடை | | | திருமுறைகள் |
| (3) | | | றம்சான் ஹஜ்ஜிப் பெருநாள் | | |
| (4) | | | | கிறிஸ்தவம் | |

(5) பின்வரும் பாடலின் அடுத்த நான்கு வரிகளை எழுதிப் பூர்த்தி செய்க.

*நாட்டுப்பற்றை எம்முணர்வில்*
*நலமாய்ப் பூண்டு நாம் வாழ்வோம்*

........................................................................
........................................................................
........................................................................
........................................................................

**(03)** விபத்துக்கள் தொடர்பாக பத்திரிகைகளில் வந்த சில செய்திகள் வருமாறு :

(1) மின்விளக்கு பூட்டி பட்டம் ஏற்றிய சிறுவர் மின்தாக்கி மரணம்
(2) கைபேசியில் உரையாடியபடி மோட்டார் சைக்கிள் ஓட்டிய இளைஞன் எச்சரிக்கை ஒலி, ஒளி இயங்கிய போதிலும் புகையிரதக் கடவையில் புகைவண்டி மோதி மரணம்
(3) சுற்றுலாவிற்குச் சென்ற குடும்ப உறுப்பினர் அறுவர் ஆற்று நீரில் மூழ்கி மரணம்.
(4) தோட்டத்தில் பட்டம் ஏற்றிய சிறுவன் பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து உயிரிழப்பு
(5) தோட்டத்திற்குச் சென்ற விவசாயி யானை தாக்கி படுகாயம்
(6) தெரு நாயினால் கடியுண்ட மனிதன் சிகிச்சை பெறாமையால் மரணம்
(7) திருமண வீட்டில் விருந்துண்ட பலர் உணவு நஞ்சானதால் வைத்தியசாலையில் அனுமதி
(8) குளவிக்கூட்டிற்கு கல்லெறிந்த சிறுவர்கள் குளவி குத்தி படுகாயம்



மேற்படி செய்திகளை நன்கு வாசித்து பின்வரும் அட்டவணையை பொருத்தமாக பூர்த்தி செய்க.

| | விபத்தின் வகை | காரணம் | தவிர்க்கக்கூடிய நடவடிக்கை |
|---|---|---|---|
| (1) | | | |
| (2) | | | |
| (3) | | | |
| (4) | | | |
| (5) | | | |
| (6) | | | |
| (7) | | | |
| (8) | | | |



kalvi.lk

**(04)** சில தொழிலாளர்களால் / விளையாட்டு வீரர்களால் அணியப்படும் பாதுகாப்பு உடைகள், கவசங்களின் படங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்களையும் அவற்றை அணிவோரின் தொழிலையும் குறிப்பிடுக.

| கவசம் / ஆடை | அணிவோர் |
|---|---|
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |

Education கல்வி அடியாபன



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page